மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–2011–க்கான Software Export விவரங்களை, Software Technology Park of India-தான், எவ்வளவு மென்பொருட்கள் export ஆனது என்ற சரியான நிலவரத்தைக் கூறுவார்கள். அந்த Accurate report இதுவரை நமக்கு வரவில்லை. சராசரியாக, கடந்த வருடத்தைவிட ஒரு ஐந்தாயிரம் கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல், ELCOT மூலமாக மொத்தம் 8 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

169—

மீன் ஏற்றுமதி மையம்

***109560—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினத்தில் மீன்கள் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினம் பகுதியில் மீன்கள் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

2010 மே 11]

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுரங்கப்பட்டினம் என்பது காஞ்சிபுரம் மாவட்டத்தினுடைய கடலோரப் பகுதியின் மையப் பகுதி. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 44 கடலோர மீனவர் கிராமங்கள் இருக்கின்றன. இங்கு ஒவ்வோர் ஆண்டும், 14 ஆயிரம் டன்னுக்கு மேலாக கடல் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், உள்நாட்டு மீனவர்கள், ஏறக்குறைய ஆயிரம் டன்னுக்கு மேலாக மீன்கள் உற்பத்தி செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனியார் அதிகமாக உவர் நீர் இறால் வளர்க்கிறார்கள். மீன் பண்ணைகள் அதிகமாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நன்னீர் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே மீன்கள் ஏற்றுமதி மையம் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட சதுரங்கப்பட்டினம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மீனவக் கிராமங்களில் கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் கட்டுமரங்கள் மூலமாகத்தான் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அப்படி ஒவ்வொரு கிராமத்திலும் பிடிக்கப்படுகின்ற மீன்கள், அந்தந்த ஊர்களைச் சுற்றியுள்ள உள்ளூர் தேவைக்கும், அந்தப் பகுதியிலே வரக்கூடிய சிறு மீன் வியாபாரிகளுடைய தேவைக்கும் உகந்ததாகவே இருக்கின்றன. இங்குள்ள மீனவர்கள் சிறிய கவலை வலை, சிறிய வலைகளிலே மீன் பிடிக்கிறார்கள். அதேபோல கானங்கெளுத்தி மீன்கள் மற்றும் சின்ன மீன்களைப் பிடிக்கின்றார்கள். இறால், சிங்கி இறால் போன்ற பெரிய அளவிலே ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற மீன்கள் மற்றும் இராயபுரம் மீன்பிடித் துறைமுகம், கடலூர் மீன்பிடித் துறைமுகம், நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் போன்ற பெரிய மீன்பிடித் துறைமுகங்களில் விசைப் படகுகள் மூலமாகப் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மீன்கள் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடிய அந்த நிலை ஏற்படும். எனவே, ஆங்காங்கே மீனவக் கிராமங்களில்

பிடிக்கப்படுகின்ற மீன்கள் நம்மை சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தேவையான அளவு இருக்கின்ற காரணத்தாலும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு அங்கே மீன்கள் இல்லை என்று அரசு கருதுகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் அப்படி ஒரு தேவை இருக்குமேயானால் வருங்காலத்திலே அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பெரிய launch–கள்கூட வாங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீனவர்கள் நலன் கருதி மீன்பிடி ஏற்றுமதி மையத்தை அங்கே அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், மாமல்லபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 10 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் தொடர்ந்து கடல் அரிப்பு ஏற்படுகிறது. எனவே, மாமல்லபுரம், கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில், தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல சதுரங்கப்பட்டினம், அதற்குப் பக்கத்தில் உள்ள மீனவக் கிராமங்களில் விசைப் படகுகளை மீனவர்கள் யாராவது வாங்குவார்களேயானால், அவர்கள் கண்டிப்பாக இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்தில்தான் தொழில் செய்யமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிகளிலே தொழில் செய்யமுடியாது. அவர்களுடைய

2010 மே 11]

தொகுதியில் இருக்கின்ற மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். அதனை நம்முடைய தமிழகத்தினுடைய வரலாற்று முதல்வர், அய்யா கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச் செல்வேன் என்பதனைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தில் உள்ள திருப்பாலைக்குடி, மோர்ப்பண்ணை ஆகிய இடங்களில் அதிக அளவில் மீனவர்கள் வசிக்கிறார்கள், மீன்பிடித் தொழிலும் செய்கிறார்கள். அவர்கள் மீன்களை விற்பனை செய்வதற்கு இராமநாதபுரம்தான் செல்லவேண்டும். எனவே, மீன்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனம் இல்லாமல் மீனவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மீன் ஏற்ற வாகனம் ஒன்று துறையின்மூலம் அமைத்துக் கொடுத்திட கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் உணவுப் பொருட்களை MPEDA மூலம் ஏற்றுமதி செய்வதால் அன்னியச் செலாவணி அதிகம் கிடைக்கும். மீனவர்கள்மூலம் தமிழ்நாடு அரசு அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருவதால் ஏற்றுமதி மையம் அமைக்க முடியும். எனவே, அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகின்ற மீனவர்களின் நல்வாழ்விற்கு MPEDA மூலம் நிதி பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான அதாவது tunas சூரை மீன் பிடிப்பதற்காக, அவர்களுக்குத் தேவை ஏற்படுமேயானால் MPEDA மூலம் நிதியை வழங்கி வருகிறார்கள். MPEDA–வில் மீனவர்கள் மனு செய்தால், கோரிக்கை வைத்தால் நிச்சயமாக MPEDA நிறுவனம் மூலமாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தேவைகள் நிறைவேற்றித் தரப்படும்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

170—

பால் குளிரூட்டும் நிலையம்

***106270—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றியத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றியத்தில் எம்.எஸ்.158 நத்தம் கோவில்பட்டி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்பட்டு 24–7–2008 முதல் செயல்படத் தொடங்கி, தற்போது நாளொன்றுக்கு தினசரி சராசரியாக 4,500 லிட்டர் பால் கொள்முதல் செய்து குளிர்விப்பு செய்யப்பட்டு, திண்டுக்கல் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.